புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜுன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# ஐங்குறுநூற்றில் சொற்பொருள் உறவு

செ.சுரேஷ்குமார்
முழுநேர முனைவர்பட்ட ஆய்வாளர்
தமிழாய்வுத்துறை,
திருவள்ளுவர் அரசு கலைக்கல்லூரி,
இராசிபுரம்637 401.

முனைவர் க.அன்பழகன்
உதவிப்பேராசிரியர், நெறியாளர்
தமிழாய்வுத்துறை
திருவள்ளுவர் அரசு கலைக்கல்லூரி,
இராசிபுரம்637 401.

*ஆய்வுச் சுருக்கம்*

சங்க இலக்கியத்தில் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண் கீழ்க்கணக்கு என்ற தொகை இலக்கியங்களாக உள்ளன. இதில் ஐங்குறுநூறு என்ற நூலானது மிகவும் சிறப்பு வாய்ந்த நூலாகும். இந்நூல் புலச்சொற்கள் என்ற அடிப்படையில் பல்வேறு வகையான சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளது. அச்சொற்களின் அடிப்படையில் ஐங்குறுநூற்றில் எடுத்தாளப்பட்டுள்ள சொற்களைக் கொண்டு அந்தச் சொற்களின் அடிப்படையில் அவற்றின் பொருள் உறவுமுறையை இக்கட்டுரையில் ஐங்குறுநூற்றில் சொற்பொருள் உறவு பற்றி ஆராயப்பட்டுள்ளது.

*முன்னுரை*

ஒரு மொழியில் உள்ள சொற்களின் அடிப்படையிலேயே அம்மொழியின் வளமையை அறிய முடியும். அதுபோலவே ஒரு மனிதனின் சிந்தனையைத் தூண்டுவதாகவும், அச்சிந்தனையை வெளிக்கொண்டு வர உதவுவதுமாக இருக்கக்கூடிய மிகப்பெரிய கருவியாக அமைவது சொற்களேயாகும். மொழியானது காலத்திற்கு ஏற்பவும் சமுதாயத்திற்குத் தேவையான கருத்துக்களை எடுத்துரைக்கவும், புதுப்புது சொற்களை உருவாக்க வேண்டும். இவ்வாறு புதுப்புது சொற்களை உருவாக்குவதன் மூலமாகவே மொழியில் தேக்க நிலையைப் போக்க முடியும்.

எல்லாச் சொல்லும் பொருள் குறித்தாலும் அதன் பயன்பாட்டுச் சூழலைச் சார்ந்து பொருளானது மாறுபடுகின்றது. ஒருவனது கவிதையைப் பார்த்து இதுதான் மிகச்சிறந்த கவிதை என்றால் அது சிறந்த கவிதை எனப் பொருள்படும். அதுவே இதுதான் கவிதையா? என்றால் அக்கவிதை நல்ல கவிதை இல்லை என்பதை மறைமுகமாகக் குறிக்கப்படுகிறது. எனவே சொற்களின் பொருளானது நெகிழ்வானது. சூழலுக்கு ஏற்ப மாறுகின்ற தன்மை கொண்டுள்ளது. என சொற்பொருண்மையியலாளர் கூறுவார்கள். எனவே கட்டுரையில் பொருள் உறவு, ஒரு சொல் பல பொருள், பல சொல் ஒரு பொருள் ,ஒப்புருச்சொல், எதிர்ச்சொல் போன்றவை விளக்கப்பட்டுள்ளது.

*ஆய்வு நெறிமுறைகள்*

இவ்வாய்வானது சொற்களின் அடிப்படையில் பகுப்புமுறை,விளக்கமுறை, அகராதி நோக்க ஆய்வுமுறை ஆகியவற்றின் அடிப்படையில் ஆராயப்பட்டுள்ளது.

*சொல்பொருள்*

*தொல்காப்பிய சொல்லதிகாரத்திற்கு உரை வகுத்த இளம்பூரணர் “சொல் என்பது எழுத்தோடு புணர்ந்து பொருள் அறிவுறுக்கும் ஓசை”[(1)] என எடுத்துக் கூறியுள்ளார். அது மட்டுமல்லாது பல்வேறு வகையான உரையாசிரியர்களும் சொல் என்பது எழுத்துக்களோடு ஒன்றுசேர்ந்து பொருள் அறிவுறுத்தும் ஓசை எனக் கூறுகின்றனர். தொல்காப்பியத்தில் சொல்லின் தன்மையையும், அச்சொல்லுக்குத் தேவையான இலக்கணத்தையும் குறிக்கும் வகையில் பல்வேறு வகையான சூத்திரங்களைப் படைத்துள்ளார். ஒரு மொழியில் உள்ள தொகை அமைப்பைக் காண்பதற்கு அதன் அடிப்படையான உறவுகளைப் பயன்படுத்தலாம். ஒரு பொருள் பன்மொழிகளைச் சொற்தொகையிலிருந்து நீக்கிவிட்டால் சொற்றொகை அமைப்பு மாறாது என்று கூறி ஒரு பொருள் பன்மொழியத்தை மிகையானதாகக் கூறுகிறார்.[(2)]*

*ஒரு செயலைக் குறிக்க ஒன்றுக்கு மேற்பட்ட சொற்கள் இருக்கும் பொழுது அச்சொற்களின் பொருள்களை வேறுபடுத்திக் காட்டுவதற்காகக் கொடுக்கப்படும் குறிப்பு, சொற்பொருள் விளக்கக் குறிப்பு ஆகும்.*

*உறவு முறையில் அமைந்த சொற்கள்*

*மனித உறவுகளின் அடிப்படையிலேயே அமைகின்ற உறவானது பிறப்பு முதல் இறப்பு வரை பலவகைப் பட்ட உறவுமுறையில் சொற்களைப் பெறுகின்றான். அவை சமுதாயத்தின் குழுக்களால் பிரிக்கப்பட்டு உறவுக்கு ஏற்ப சொற்கள் தோன்றுகின்றன. இந்த உறவுமுறைச் சொற்களானது மொழிக்கு மொழி சமுதாயத்திற்கு சமுதாயம் மாறுபடுகின்றது. இதனை சமூகவியலாளர் உறவு முறையை வயது, பால், உறவுநிலை, பிரிவு, திருமணம் உறவு என்ற சில சமுதாய அளவைகளின் அடிப்படையில் ஆராய்வர்[(3)]*

*சொற்பொருள் உறவு*

*சொற்பொருள் உறவு என்பது பெரும்பாலும் ஒரு சொல்லுக்கும் அது குறிக்கின்ற பொருளுக்கும் இடையில் உள்ள உறவு சொற்பொருள் உறவு ஆகும். இந்த உறவானது பொதுவானதாக இருக்கின்றது. அந்தச் சொற்களை எவ்வித சூழலும் இன்றித் தனியாக நிற்கும் போது ஒரு குறிப்பிட்ட கருத்தை, பொருளைக் குறிக்கப்படுவதில்லை. அவ்வாறு குறிக்காமல் அச்சொற்களுக்குத் தொடர்புடைய பல பொருள்களையும், கருத்துக்களையும் மட்டுமே வெளிப்படுத்துகின்றது.*

*சொல்லுக்கும் பொருளுக்கும் இடையே காணப்படுகின்ற உறவின் அடிப்படையிலேயே சொற்த் தொகுதியை நான்கு பிரிவுகளாகப் பிரிக்கலாகின்றது.*

*1. ஒரு சொல் பல பொருள்*
*2. ஒரு பொருள் பன்மொழி*
*3. எதிர்ச்சொல்*
*4. மீச்சொல்- கீழ்ச்சொல் எனலாம்.*

*ஒரு சொல்லானது பல்வேறு வகையானச் சூழல்களில் பயன்படுத்தப்படுகின்ற நிலையில் புதிதாகப் பொருட்களைப் பெறுகின்றது.*

*1.ஒரு சொல் பல பொருள்*

*ஒரு சொல்லுக்கு பல்வேறு பொருட்களைத் தருகின்ற முறைக்கு ஒரு சொல் பல பொருள் எனலாம்.*

*ஒரு சொல்லுக்கு ஒரு பொருள் மட்டுமல்லாது பல பொருள்கள் புழக்கத்தில் உள்ளன. அப்பொருள்கள் ஒவ்வொன்றும் ஒன்றுக்கொன்று தொடர்பு கொண்டு உள்ள சொற்களுக்கு பல பொருள் சொற்கள் எனலாம். ஐங்குறுநூற்றில் ஒரு சொல் பல பொருள்கள் பழக்கத்தில் உள்ளன.*

*எடுத்துக்காட்டு*

*ஒரு சொல் பல பொருள்*

| | | |
|---|---|---|
| *அடி -* | *பாதம்* | *ஐங் – 389 – 5* |
| | *வீரம்* | *ஐங் – 399 – 4* |
| *அடுக்கம்-* | *மலைப்பிளவு* | *ஐங் – 220 – 2* |
| | *மலைப்பக்கம்* | *ஐங் – 267 – 2* |

| | | |
|---|---|---|
| | மலைப்புறம் | ஐங் – 289 – 1 |
| ஆம்பல் | ஆம்பல் மலர் | ஐங் – 21 – 2 |
| | குமுத மலர் | ஐங் – 21 – 2 |
| | அல்லி மலர் | ஐங் – 34 – 2 |
| இமிழ் | ஆரவாரம் | ஐங் – 143 – 1 |
| | ஓசை | ஐங் – 171 – 1 |
| | ஒலி | ஐங் – 172 – 2 |
| ஏந்து | மிக்க | ஐங் – 353 – 2 |
| | நீண்டு | ஐங் – 466– 1 |
| | மேலே | ஐங் – 498 – 3 |
| கலம் | மரக்கலம் | ஐங் – 192 – 2 |
| | மண்பாண்டம் | ஐங் – 303– 1 |
| | ஆபரணம் | ஐங் – 316 – 1 |
| | பாத்திரல் | ஐங் – 391 – 4 |

ஒரு பொருள் பல சொல்

ஒரு சொல்லானது பல்வேறு வகையான சொற்களைக் காட்டுவது போன்று பல சொற்கள் சேர்ந்து ஒரு பொருளைக் குறிக்கும். இரண்டிற்கும் மேற்பட்ட சொற்கள் கடினமானச் சொற்களுக்கு ஒரு சொல்லைப் பொருளாகத் தருவது பல சொல் ஒரு பொருள் உத்தி எனலாம்.(4)

எடுத்துக்காட்டு

ஒரு பொருள் பல சொல்

| | | |
|---|---|---|
| கவின் | பேரழகு | ஐங் – 30 – 4 |
| | எழில் | ஐங் – 103 – 4 |
| | பேரெழில் | ஐங் – 226 – 4 |
| கோடு | கடற்கரை | ஐங் – 191 – 1 |
| | சங்கு | ஐங் – 192 – 1 |
| | மலைமுகடு | ஐங் – 318 – 5 |
| | மலை உச்சி | ஐங் – 358 – 1 |
| துவர் | சிவந்த | ஐங் – 185 – 2 |
| | பவளம் | ஐங் – 185 – 2 |
| | நிறம் | ஐங் – 363 – 1 |
| பாயல் | பள்ளி | ஐங் – 96 – 4 |
| | இருக்கை | ஐங் – 176 – 1 |
| | உறக்கம் | ஐங் – 195 – 4 |
| | தலைவனைத் தழுவுதல் | |

எதிர்ச்சொல்

ஒரு சொல்லானது தருகின்ற பொருளுக்கு மாற்றாக மற்றொரு பொருளைத் தருவது எதிர்ச்சொல் எனலாம். பொருள் உறவில் வேறுவேறு வகையான முரண்பாட்டுடன் கூடிய பொருட்கூறுகள் வெளிப்படுத்துவது எதிர்ச்சொற்கள் ஆகும். இந்த எதிர்ச்சொல் நான்கு வகையாக உள்ளது.

1. முழு எதிர்மறைச் சொல்
2. படித்தர எதிர்மறைச் சொல்
3. பொருள் முரண்
4. எதிர் விளைவுச் சொற்கள்

என்பனவாகும்(5)

1. முழு எதிர்மறைச் சொல்

இரண்டு சொற்களுக்கு இடையில் எதிரெதிராக பொருள் கொண்டிருக்கும் இவ்விரு சொற்களுக்கு இடையில் படித்தர பொருள் நிலையும் இருக்காது.

நகை (ஐங் – 85 – 5) - பகை (ஐங் – 429 – 2)
இன்பம்(ஐங் – 86 – 3) - துன்பம்(ஐங் – 9 – 2)
செல்வேன்(ஐங் – 221 – 4)- செல்லாதே(ஐங் – 233 – 4)
வெம்மை(ஐங் – 354 – 3)- குளிர்ச்சி(ஐங் – 327 – 5)

என இவ்வாறு ஐங்குறுநூற்றில் சொற்கள் வழங்கப்பட்டுள்ளது.

2.படித்தர எதிர்மறைச் சொல்

படித்தர எதிர்மறைச் சொல்லானது அந்தந்த எதிர்ச் சொற்களுக்கு இடையில் படித்தரம் கொண்டு அமையும்

விருப்பம் (ஐங் – 72- 2) - வருத்தம் (ஐங் – 325 – 3)
முன்பனிக்காலம்(ஐங் – 223– 4) - கோடைக்காலம்(ஐங் – 303– 2)
சூரியன் (ஐங் – 330– 4) - சந்திரன் (ஐங் – 264 – 1)
சேர மன்னன் (ஐங் – 178 – 3) - பாண்டிய மன்னன்(ஐங் – 55 – 2)

3.பொருள் முரண் சொல்

ஒரு சொல்லின் பொருள் கூறுகளின் சொல்லில் முரண்பட்டு அல்லது அச்சொல்லின் பொருள் இல்லாமல் போகும்போது அப்பொருளின் சொற்கள் அதற்குத் தேவையான இடத்தில் பொருள் தோன்றுகிறது. அவ்வாறு தோன்றுகின்ற சொற்களுக்குப் பொருள் முரண் சொல் எனலாம்.

வணங்குதல் (ஐங் – 387 – 2) - பழித்தல் (ஐங் – 9 – 2)
பசு (ஐங் – 445 – 3) - எருது (ஐங் – 3 – 2)
நுணா மரம் (ஐங் – 342 – 3) - பனைமரம் (ஐங் – 114 – 4)
வண்டு (ஐங் – 406 – 3) - மயில் (ஐங் – 295 – 3)

இவ்வாறு சொற்கள் அமைகின்றன.

4. எதிர் விளைவுச் சொல்

பொதுவாக இரண்டு சொற்களானது அதன் இடையிடையே நேர் எதிர் உறவு காணப்படுகின்ற நிலையில் எதிர் விளைவுச் சொற்கள் தோற்றம் பெறுவது எதிர் விளைவுச் சொற்களாகும்.

இசையோன் (ஐங் – 151 – 5) - வலைஞர் (ஐங் – 195 – 1)
நெல்லி மரம் (ஐங் – 334 – 2) - வேப்ப மரம் (ஐங் – 30 – 1)
காட்டுப்பன்றி (ஐங் – 261 –1 ) - ஆண் பன்றி (ஐங் – 267 – 1)
துணை மான் (ஐங் – 326 – 2) - பெண் மான் (ஐங் – 354 – 2)

ஐங்குறுநூற்றில் இடம்பெற்ற பாடல்களின் மேலே கூறப்பட்ட நான்கு வகையான எதிர்ச்சொற்கள் மிகுதியாகக் காணப்பட்டுள்ளன.

மீச்சொல்

ஒரு மொழிகளில் சில சொற்களின் பொருள்களும் வேறு வேறு சொற்களின் பொருள்களை உள்ளடக்கியதாகக் காணப்படுகின்றன. ஒரு பொதுச் சொல்லினுள் அடங்குகின்ற சொல்லைக் கீழ்ச்சொல் எனவும். பல கீழ்ச் சொற்களை உள்ளடக்கிய பொதுச்சொல் மீச்சொல் எனவும் குறிக்கப்பெறும். “பிராணி” என்ற ஒரு சொல்லானது விலங்கு, பறப்பன, ஊர்வன, நீந்துவன என்ற பல்வேறு வகையானதை உள்ளடக்கியுள்ளது. விலங்கினத்தில் உள்ள அனைத்து விலங்குகளையும், பறவை இனத்தில் உள்ள அனைத்துப் பறவை இனங்களையும், பல்வேறு வகையான பூச்சிகளையும், நீந்துகின்றனவற்றில் அனைத்து மீன்களையும் உள்ளடக்கியதாக இருக்கின்றது.

மீச்சொல்

| | | |
|---|---|---|
| | விலங்கு | புரவி - குதிரை |
| | பரப்பன | பருந்து |
| விலங்கு | ஊர்வன | அலவன் – நண்டு<br>யாமை - ஆமை |

| | | |
|---|---|---|
| | நீந்துவன | இரை - மீன் |
| | நிலம் நீரில் வாழ்வன | முதலை |

| | | |
|---|---|---|
| | மரம் | கோங்கு - கோங்குமரம் |
| தாவரம் | செடி | பீரம் - பீர்க்கம்புச் செடி |
| | கொடி | பாசி – பாசிக்கொடி |
| | மலர் | குவளை -குவளை மலர் |

*போன்றவை ஐங்குறுநூற்றில் மீச்சொற்களாகக் காணப்படுகின்றன*

*முடிவுரை*

*ஒரு சொல்லானது அதன் சூழலின் அடிப்படையில் பல பொருள்களைத் தருகின்றது. அச்சொல்லின் பல பொருள்களின் தன்மை, ஒப்புருச்சொல், எதிர்ச்சொல், மீச்சொல் என்ற சொற்களின் பொருண்மையை எடுத்துக் கூறுகின்றது. பண்டைய காலத்தில் இருந்தே சொற்களுக்கான பொருள் வெளியீட்டுத் தன்மையானது சொன்மை, பொருண்மை ஆகியவற்றின் அடிப்படையிலேயே அமைந்துள்ளது. ஐங்குறுநூற்றில் சொற்பொருள் உறவு என்பது சொல்லுக்கும், பொருளுக்கும் இடையில் உள்ள உறவை எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.*

*சாண்றென் விளக்கம்*

*1.இ.மறைமலை , சொல்லாக்கம் – அமைப்பும் ஆய்வும் - பக் -6*
*2. முனைவர்.ச.இராசேந்திரன் - தற்காலத்தமிழ்ச் சொற்களஞ்சியம் பக் -13*
*3.முனைவர். எச். சித்திரபுத்தன் – சொல்லும் பொருளும் – பக் -157*
*4.மேலது – பக் -83*
*5.முனைவர் சரளா ரங்கநாதன் – தமிழ் அகராதிகளின் வளர்ச்சிப்போக்கும் அமைப்பும் வேறுபாடும் – பக் - 62*

*துணைநூற்பட்டியல்*


1. இ.மறைமலை - சொல்லாக்கம் – அமைப்பும் ஆய்வும்
   தமிழ்மண் பதிப்பகம்,
   2,சிங்காரவேலர் தெரு,
   தியாகராயர் நகர்
   சென்னை -600 017.
2. முனைவர்.ச.இராசேந்திரன் - தற்காலத்தமிழ்ச் சொற்களஞ்சியம்
   தமிழ்ப்பல்கலைக் கழகம்
   தஞ்சாவூர்
3. முனைவர். எச். சித்திரபுத்தன் - சொல்லும் பொருளும்
   அன்னம்
   மனை எண் 1, நிர்மலா நகர்,
   தஞ்சாவூர்
4. முனைவர் சரளா ரங்கநாதன் - தமிழ் அகராதிகளின் வளர்ச்சிப்போக்கும்
   அமைப்பும் வேறுபாடும்
   ஸ்ரீ முருகன் பிரிண்டர்ஸ்
   சென்னை – 5


********* ********* ********** ********* ********* ********** ********** **********